මුදල්, ආර්ථික සහ ප්‍රතිපත්ති සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMY AND POLICY DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 2484500, 011 2484600, 011 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 2449823
වෙබ් අඩවිය / இணைய தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: BD/CBP/01/01/03-2019
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2019.12.04

**வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல: 07/2019**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள்
கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**அரசாங்க செலவினத்தினை முகாமைசெய்தல் மற்றும் நிதி ஒழுங்கிணைப் பேணுதல்**

பொது மக்களுக்கு நிவாரணம் வழங்கல் மற்றும் பொருளாதாரத்தினை விருத்திசெய்யும் நோக்கத்துடன் வரிக் கொள்கையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டு வருகின்றது. வரிக் கட்டமைப்புக்கான மாற்றங்களைக் கவனத்திற் கொண்டு, அனைத்து செலவின நிறுவனங்களினதும் செலவினங்களை விவேகத்துடன் முகாமை செய்வதற்கு வாகனங்கள், பிரயாணம், கட்டிட வசதிகளுக்கான செலவினங்கள் உள்ளடங்களாக அத்தியவசியமற்றதும் முன்னுரிமை வழங்க அவசியமற்றதுமான அனைத்து செலவினங்களையும் கட்டுப்படுத்துவதற்கு அதிமேதகு சனாதிபதி நிரல் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களை கேட்டுள்ளதுடன் அமைச்சரவையும் அதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளது.

02. முறையான செலவினக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறுவதனையும் அத்தகைய நடவடிக்கைகள் செலவினத்தினைக் குறைப்பதில் வினைத்திறனாகக் காணப்படுவதற்கும் பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் (Chief Accounting Officers) மற்றும் கணக்கீட்டு அலுவலர்கள் (Accounting Officers) அனைவரும் பொறுப்பாக இருத்தல் வேண்டும். இப்பின்னணியில், பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்கள் செலவினக் கட்டுப்பாட்டினை விசேடமாக மின்சாரம், நீர், தொலைபேசி தொடர்பாடல் சேவை, காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்களினைக் கொள்வனவு செய்தல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிரயாணங்கள் ஆகியவற்றுக்கான செலவினங்களை முகாமை செய்யும் வகையில் முடியுமான செலவின முகாமைத்துவ அளவுகோல்களை தயாரித்து செயற்படுத்தல் வேண்டும். அவ்வாறான அளவுகோல்களை 2019 டிசம்பர் 10 ஆந் திகதி அல்லது அதற்குமுன்னர் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியிட்டு (dgma@dma.treasury.gov.lk) தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு (dgnb@nbd.treasury.gov.lk) மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். இவ்விடயம் தொடர்பாக அரசாங்க செலவினங்களை முகாமைசெய்வதனை வலுப்படுத்தல் என்ற 4/2019 ஆம் இலக்க வரவு செலவுத்திட்டச் சுற்றுநிருபத்தின்பால் உங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

03. முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தீர்மானிக்கப்பட்ட கட்டுப்பாட்டு எடுகோல்களின் அடிப்படையில் இச்சுற்றுநிருபத்தின் செயற்படுத்துகையினைக் கண்காணிப்பார். அளவுகோலின் செயற்படுத்துகையினைக் கண்காணிக்கும் பணி குறிப்பீடுசெய்யப்பட்ட அலுவலரொருவருக்கு வழங்கப்படுவதுடன் குறித்த அலுவலர் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் மற்றும் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் என்பவற்றுடன் ஒருங்கிணைப்பு பணிகளை முன்னெடுத்தல் வேண்டும்.

04. அதேபோன்று, புதிய வாகனங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட முடியாது என்பதுடன், கட்டிடங்களும் வாடகைக்குப் பெறமுடியாது. எவ்வாறாயினும், குப்பையேற்றல் இயந்திரம் போன்ற பயன்பாட்டு வாகனங்களின் கொள்வனவு தேவைக்கேற்றாற் போல திறைசேரியினால் கவனத்திற் கொள்ளப்படும். செலவினை மேற்கொள்கின்ற நிறுவனங்களில் தற்பொழுது காணப்படும் வளங்களை உரிய முறையில் முகாமை செய்வதன் மூலம் பயன்படுத்துவதற்கு முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

05. மேலும், திரட்டிய நிதியம் அல்லது ஏனைய நியதிச்சட்ட நிதியத்தின் பணத்தினைப் பயன்படுத்தி தினப் பதிவேடு, கலண்டர் என்பவற்றினை அச்சிடாதிருத்தல் வேண்டும்.

06. மேலே குறித்த வழிகாட்டல்களுக்கு அமைவாக செயற்படுவதுடன் வினைத்திறன் மிக்க செலவின முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்கினை முன்னெடுத்து பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான புதிய அரசாங்கத்தின் செயற்றிட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்களை வேண்டிக் கொள்கின்றேன்.

**ஒப்பம்: எஸ்.ஆர்.ஆட்டிகல**

திறைசேரியின் செயலாளர்

பிரதிகள் :

(i) சனாதிபதியின் செயலாளர்

(ii) பிரதமரின் செயலாளர்

(iii) அமைச்சரவையின் செயலாளர்

(iv) கணக்காய்வாளர் நாயகம்

(v) பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்